සර්වෝදය
சர்வோதயம்
Sarvodaya

The Alliance for Just Deliberation on Solar Geoengineering

சூரிய புவிப்பொறியியல் நிர்வாகம்: ஒரு கண்ணோட்டம்

காலநிலைத் தலையீடுகள் குறித்த விவாதங்கள் அதிகரித்து வரும் நிலையில், சூரிய புவிப்பொறியியல் (சூரிய கதிர்வீச்சு மாற்றம் அல்லது SRM எனவும் அறியப்படுகிறது) பற்றிய எதிர்பார்ப்பு, மேற்பார்வை, வகைக்கூறல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு பற்றிய உடனடி கேள்விகளை எழுப்புகிறது. இந்த அணுகுமுறைகள் ஊகங்களாகவும் பரிசோதிக்கப்படாதவையாகவும் இருக்கும் அதே வேளை, முழு புவிக்கோளையும் பாதிக்கும் அவற்றின் ஆற்றல் காரணமாக வினைத்திறன்மிக்க நிர்வாகம் மிகவும் இன்றியமையாததாகிறது.

வினைத்திறன்மிக்க நிர்வாகமானது SRM ஆய்வு மற்றும் சாத்தியமான செயற்படுத்தல் என்பன வெளிப்படைத்தன்மை, நீதி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றால் வழிநடத்தப்படுவதை உறுதிசெய்வதோடு, பின்வருவனவற்றை உறுதி செய்யும்:

- நன்கறியப்பட்ட அபாயங்களைக் குறைக்கும்.
- நன்கறியப்படாத அபாயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும்
- தவறான பயன்பாட்டைத் தடுக்கும்.
- பொதுமக்களின் நம்பிக்கையை வளர்க்கும்.

வலுவான கட்டமைப்புகள் இல்லாதவிடத்து SRM ஆய்வு மற்றும் சாத்தியமான செயற்படுத்தல் பின்வருவனவற்றுக்கு

- எதிர்பாராத சுற்றாடல் மற்றும் சமூக விளைவுகளுக்கு வழிவகுத்தல்.
- பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களை விகிதாசாரமின்றிப் பாதித்து உலகளாவிய சமத்துவமின்மையை மேலும் மோசமாக்குதல்
- புவிசார் அரசியல் பதற்றங்களைத் தூண்டுதல் அல்லது பலம்பொருந்திய நாடுகள் அல்லது தனிப்பட்ட அமைப்புகளின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தல்

நன்கு வடிவமைக்கப்பட்ட நிர்வாகச் சட்டகமானது தீர்மானமெடுத்தலானது உள்ளடங்கல் தன்மையுள்ள, வகைக்கூறல் கொண்ட பரந்த காலநிலை இலக்குகளுடன் சீரமைக்கப்பட்டதாகவும் இருப்பதை உறுதிசெய்வதற்கான முக்கியமான முன்னுரிமைகளை எதிர்கொள்ளும்.

ஆய்வுக்கான நிர்வாகமானது தரவு மற்றும் நிதியுதவியில் வெளிப்படைத்தன்மை, பொதுமக்களின் ஈடுபாடு மற்றும் சிறிய அளவிலான பரிசோதனைகளுக்கான பாதுகாப்புகள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதோடு, செயற்படுத்தலுக்கான நிர்வாகமானது சர்வதேச ஒருங்கிணைப்பு, அபாய மதிப்பீடு மற்றும் நீண்டகால மேற்பார்வையை உள்ளடக்கியது. இவ்விரண்டுக்கும் இடையிலான தெளிவான வேறுபாடுகள் அவசியமானவை. ஏனெனில் முதிர்ச்சியற்ற அல்லது ஒழுங்கற்ற ஆய்வு நம்பிக்கை மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பைக் சீர்குலைக்கலாம். SRM ஐச் சுற்றியுள்ள முக்கிய நிர்வாக தொனிப்பொருள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:



1. நீதியும் சமத்துவமும்:

குறிப்பாக தென் அரைக்கோளத்தில் உள்ள பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களும் பிராந்தியங்களும் தீர்மானம் எடுப்பதில் அர்த்தமுள்ள வகிபங்கைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதன் மூலம் உள்ளடங்கலுக்கு முன்னுரிமை அளித்தல். போதிய பிரதிநிதித்துவம் பெறாத குரல்களை, குறிப்பாக காலநிலை மாற்றத்தால் அதிகம்பாதிக்கப்பட்டவர்களின்குரல்களை வலுவூட்டுதல். இதன் மூலம் நிர்வாகம் சார்ந்த கலந்துரையாடல்கள் பல்வேறு கண்ணோட்டங்களையும்வாழ்வியல் அனுபவங்களையும் பிரதிபலிக்கும்.



2. 2. வெளிப்படைத்தன்மையும் பொதுமக்கள் நம்பிக்கையும்:

இரகசியத்தன்மை அல்லது தகுதியற்ற செல்வாக்கைத் தடுப்பதற்காக ஆய்வுப் பெறுபேறுகள், கொள்கை கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளுக்கான திறந்த அணுகலை உறுதி செய்தல்.

நம்பிக்கையை கட்டியெழுப்புவதிலும் பொதுமக்களின் அக்கறைகளை எதிர்கொள்வதிலும் சிவில் சமூகம், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் உட்பட பல்வேறு தரப்பினரையும் ஈடுபடுத்துதல்.



3. அபாயங்களைத் தணித்தல்:

SRM ஆய்வு மற்றும் அதன் சாத்தியமான செயற்படுத்தலுக்கான முன்னெச்சரிக்கை மற்றும் நெறிமுறை சார்ந்த அணுகுமுறையை உறுதிசெய்து, சுற்றாடல், சமூகம் மற்றும் நெறிமுறை சார்ந்த அபாயங்களை எதிர்கொள்வதற்கான பாதுகாப்புகளைச் நடைமுறைப்படுத்துதல்.

புகையுமிழ்வுக் குறைப்புகள் மற்றும் தகவமைப்பு முயற்சிகளுடன் SRM நிர்வாகத்தைச் சீரமைப்பதன் மூலம் ஏற்கனவே உள்ள காலநிலை தீர்வுகளுக்குப் பிரதியீடாக அல்லாமல் - அவற்றுக்குத் துணையாகச் செயற்படுதல்.



4. ர்வதேச ஒத்துழைப்பு:

உலகளாவிய ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலம் தன்னிச்சையான நடவடிக்கைகளைத் தடுத்தல், எந்தவொரு தனி நாடோ அல்லது அமைப்போ SRM நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்தவில்லை என்பதை உறுதி செய்தல்.

சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் வெளிப்படையான ஒருங்கிணைப்பு மூலம் ஆய்வு மேற்பார்வை மற்றும் சாத்தியமான செயற்படுத்தலுக்கான பகிரப்பட்ட பொறுப்பை ஊக்குவித்தல்.

ஒரு பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பானது முன்முயற்சியுள்ளதாகவும், மாற்றியமைக்கக்கூடியதாகவும், உள்ளடங்கல் தன்மை. கொண்டதாகவும் இருக்கும். காலநிலை நீதி மற்றும் நெறிமுறைப் பொறுப்புக்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளை SRM ஆய்வு மற்றும் கலந்துரையாடல்களில் பொறுப்புக்கூறலை வளர்க்கும். அத்துடன், SRM பற்றிய விரிவான மதிப்பீடுகள் இல்லாததால், பல்வேறு தளங்களில் SRM பற்றிய ஆய்வை புவிக்கோளம் தீவிரப்படுத்தி வரும் வேளையில், அதன் செயற்படுத்தலுகுத் தற்காலிகத் தடை விதிக்கப்படுவது நியாயமானதாகவும் இருக்கக்கூடும்.

உள்ளடங்கல் கொண்ட நிர்வாகத்தை உறுதிசெய்தல்?

வினைத்திறன் மிக்க நிர்வாகத்துக்கு, சட்டபூர்வமான தன்மை மற்றும் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வரலாற்று ரீதியாக விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட சமூகங்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் பரந்துபட்ட பங்கேற்பு தேவைப்படுகிறது. இருப்பினும், நிர்வாக வழிமுறைகள் பெரும்பாலும் தற்போதைய அதிகார சமநிலையின்மையை பிரதிபலிக்கின்றன. இங்கு நிகழ்ச்சி நிரலை அமைப்பவர்கள் பலம்பொருந்திய நாடுகள், நிறுவனங்கள் மற்றும் உயர்தட்டு விஞ்ஞான நிறுவனங்கள் போன்ற ஆதிக்கம் செலுத்தக்கூடிய பிரிவினராக இருப்பது தென் அரைக்கோளம் மற்றும் காலநிலையால் பாதிப்புள்ளாகக்கூடிய பிராந்தியங்களின் கண்ணோட்டங்களை ஓரங்கட்டக்கூடும்.

உள்ளடங்கல் நிர்வாக மாதிரிகள் வெளிப்படைத்தன்மை, பொதுமக்களின் ஈடுபாடு மற்றும் நடைமுறை நீதி ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. குடிமக்கள் சபைகள் மற்றும் உலகளாவிய மன்றங்கள் போன்ற முன்னெடுப்புகள், கொள்கைகள் பரந்துபட்ட அளவிலான நலன்களையும் கரிசனங்களையும் பிரதிபலிப்பதை உறுதிசெய்வதோடு தீர்மானம் மேற்கொள்ளலில் பல்வேறு குரல்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஊக்கப்படுத்தும் நிர்வாகம் எதிர் எதிர் வரையறுக்கும் நிர்வாகம்

நிர்வாகத்தினால் செயற்படுத்தல்களை உருவாக்க உதவவோ அல்லது தீங்கு விளைவிக்கும் நடவடிக்கையை நிறுத்தவோ முடியும். உதாரணமாக, ஆய்வு நிர்வாகம் என்பது பெரும்பாலும் பொறுப்பற்ற ஆய்வைத் தடுப்பதில் கவனம் செலுத்தும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாக மட்டுமே கருதப்படுகிறது. இருப்பினும், நிர்வாகம் என்பது சிறந்த தீர்மானமெடுத்தல் மற்றும் சிறந்த ஆய்வை இயலச்செய்யக்கூடிய செயன்முறைகள் அல்லது நடவடிக்கைகளையும் குறிக்கிறது என்பதை கருத்திற் கொள்வது முக்கியம். இதில் ஆய்வு முன்னெடுப்பை மேலும் சாத்தியமானதாகவும், உள்ளடங்கல் கொண்டதாகவும் மாற்றுவதற்கான நடவடிக்கைகள் அடங்கும். இரண்டு பகுதிகளிலுமான சில உதாரணங்களில் நடத்தை விதிகள், சிவில் சமூக ஆதரவு மற்றும் நிதியுதவி ஆகியவை உள்ளடங்கும்.